சோபக்ருத் ௵ கார்த்திகை ௴
நவம்பர் - டிஸம்பர் 2023

மலர்: 6
இதழ்: 8

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஸிகாய நம:

# தேஸிக ஸந்தேஸம்





MONTHLY NEWSLETTER FROM:

**SRI VEDANTHA DESIKAR DEVASTHANAM**

MYLAPORE, CHENNAI, Tel: 044 - 24953799, 044 - 43863747

Email: svdd.mylai@gmail.com Web: www.svdd.com





டோலோத்ஸவம்

ஸ்ரீ:
சோபக்ருத் ஸூ கார்த்திகை மீ
நவம்பர் - டிஸம்பர் 2023
மலர்: 6
இதழ்: 8

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஸிகாய நம:

# தேஸிக ஸந்தேஸம்

## திருக்கோவில் பூஜா காலங்கள் *

### காலை

**ஞாயிறு முதல் புதன் வரை**

| | | |
|---|---|---|
| 6.30 | - | விச்வரூபம் |
| 8.30 | - | திருவாராதனம் |
| 9.45 | - | சாற்றுமுறை |

**வியாழன் முதல் சனி வரை**

| | | |
|---|---|---|
| 6.00 | - | விச்வரூபம் |
| 7.30 | - | பொது தரிசனம் |

12.00 - உச்சிகாலம்

### மாலை

4.00 - ஸந்நிதி திறப்பு, 7.30 - திருவாராதனம், 9.00 - சயனம்

* விசேஷ காலங்களில் மாறுதலுக்கு உட்பட்டது

**தர்மகர்த்தாக்கள்:**
ஸ்ரீ அழிசூர் R. ராகவன் | ஸ்ரீ R. அனந்தபத்மநாபன் | ஸ்ரீ R. முகுந்தன்

**Editorial Board :**
ஸ்ரீ நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி - ஆசிரியர்
ஸ்ரீ நாட்டேரி ஸ்ரீஹரி (எ) லக்ஷ்மீந்ருஸிம்ஹாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி

**Photo Courtesy:** M.K.S. Mohan Babu, P.S. Anand, Thillai Ranganathan & Koteeswaran
Published by: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை-4
Printed by: Abisan Enterprises Chennai - 87, Cell : 95000 45604
Designed: ye**SK**ay designs



**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்**
மயிலாப்பூர், சென்னை - 600004. போன்: 044 - 24953799, 43863747
Website: www.svdd.com Email: svdd.mylai@gmail.com



ஸ்ரீ:

# ஆசிரியர் விண்ணப்பம்

வேங்கடாத்3ரி ஸமம் ஸ்தா2நம் ப்3ரஹ்மாண்டே3 நாஸ்தி கிஞ்சந |
வேங்கடேஶ ஸமோ தே3வோ ந பூ4தோ ந ப4விஷ்யதி ||

வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள்!

திருமயிலை வேங்கடவன் ஐப்பசித் திங்களில் பசியாற 'சப்பன் போக்' உண்டு களிப்புற்றான். அடுத்துச் செய்வதென்? என யோகத்தில் நின்றிருந்தான். அவ்வமயம் பெண் கொடுத்த பெரியாழ்வார், 'உண்ணும் திறத்து மகிழ்ந்துண்ணும் பிள்ளைக்கு' மங்களாசாஸநம் செய்தருளி நில்லா நின்றார் – ''.... உண்ட முலைப்பால் அறாகண்டாய் உறங்காவிடில்...''

இவ்வளவு எடுப்பு போதுமே! கார்த்திகை மாதத்தில் ஊஞ்சல் திருநன்னாளாக **டோலோத்ஸவம்** கண்டருள ஸங்கல்பித்தான். வாஹந மண்டப வளாகத்தில் ''அமரருள் எடுப்பான்'' சமைத்ததோ என வியக்கும் வண்ணம், ''வானவர்க்கும் வியப்பான வகுப்போடு'', வண்ணச் சீலைகளும் - வாசனைப் பூக்களும் - ஒளி விளக்குகளும் நிறைந்த ஒரு அற்புதமான ஊஞ்சல் மண்டபம் படைத்தாயிற்று. அதன் நடுவே ''மாணிக்கம் கட்டி வயிரம் இடைகட்டி ஆணிப்பொன்னால் செய்த வண்ணச் சிறுத் தொட்டில்'' உருவானது. அதற்கு அழகு செய்யும் வண்ணம், திருவேங்கடத்தெம்பெருமான், அலர்மேல் மங்கையொடும் / பெடையிரண்டை ஓர் அனம் அடைந்து பிரிந்திடாவகை திருமகள் - மண்மகளுடனும் கோலஞ்செய்து வீற்றிருந்தவாறு, வல்லுநர்கள் கீதம் பாட, ''தொண்டை மண்டல வேதியரும் தூய தென்மறை வல்லவரும்'' ஓதி நிற்க, பத்தர்கள் களித்து மகிழ... திருமாமணி மண்டபத்தைத் தோற்கச் செய்த அந்த ஊசல் உத்ஸவ வைபவத்தைக் கண்டு மறவாதார் பிறவாதாரே. மறவா நிற்க, இதோ இந்த ஸஞ்சிகையில் அற்புத வண்ணப் படங்கள்... ❊



ஸ்ரீ:

# Dolotsavam – A Divine Festival That Held Sway

FROM THE DESK OF TRUSTEES



As part of the Sathamana Mahotsavam, a special **Dolotsavam** was organised on the 10th November, 2023, and it coincided with the first day of the Panchami Theertha Utsavam – Thayar's Annual Utsavam. It was a double delight the Thayar festival was celebrated in a grand manner accompanied by Perumal on account of the Dolotsavam.

The Dolotsavam celebration is marked by elaborate preparations and meticulous planning. The temple was beautifully decorated with colorful lights, flowers, and sacred items. The festivities commenced with a procession wherein Lord Srinivasa, with His Consort Alarmelmanga Nayika, was carried within the temple premises, accompanied by chanting of Divya Prabandam and the Vedas. Then the Divya Dampathis were taken to the Special Silver Dolai. Vedic chanting was done for half an hour, followed by divine singing by renowned artistes Vidhushis Anahita Ravindran and Apoorva Ravindran. The atmosphere was filled with enthusiasm and devotion, as hundreds of devotees gathered to witness and participate in the event. These performances added an additional touch of joy to the celebration, captivating the devotees and leaving them spellbound.

It was a momentous occasion filled with devotion, traditional and cultural vibrancy and communal harmony, and it surely will leave a lasting impression in the hearts of the devotees who were fortunate to be in attendance. The enthusiasm of the Sevarthis has played a pivotal role in making the event truly memorable. We record our sincere thanks to all those who made the Dolotsavam a grand success. The Festival of Lights – Deepavali Utsavam – was celebrated in the customary, grand manner.

The spiritual journey continues with a Special Deepotsavam scheduled in Karthikai, on November 26. The event has been planned so as to feature **lighting of Laksha Deepam** in the temple premises. We request the Sevathis to participate in large numbers.

In the coming months, we anticipate more enlightening events and opportunities for spiritual growth. We request the Sevarthis to actively participate and the devotees' involvement is not just welcomed but is also considered to be crucial to the vibrancy and vitality of our temple. ✻

ஶ்ரீ:

# சோபக்ருத் வருட கார்த்திகை மாத பஞ்சாங்கம்

| ஆங்கில தேதி | தமிழ் தேதி | திதி | வாரம் | நக்ஷத்ரம் | உத்ஸவம் | உபயம் |
|---|---|---|---|---|---|---|
| நவம்பர் / டிஸம்பர் | கார்த் திகை | | | | | |
| 17/11/2023 | 1 | சதுர்த்தி / பஞ்சமி | வெள்ளி (1) | பூராடம் | கார்த்திகை மாதப்பிறப்பு. பஞ்சமி தீர்த்த உத்ஸவம் 8ம் நாள். காலை தாயார் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை குதிரை வாஹனம் உள்புறப்பாடு, ஆஸ்தானம். இரவு திருவாய் மொழி ஸேவாகாலம், சாற்று முறை | பஞ்சமி தீர்த்தம் உத்ஸவம்: ஶ்ரீமதி கமலா – சுமைதாங்கி க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார் குடும்பத்தினர். திருமஞ்ஜனம் மட்டும்: ஶ்ரீமதி வஸந்தா வாஸுதேவன் |
| 18/11/2023 | 2 | பஞ்சமி / ஷஷ்டி | சனி | உத்தராடம் | பஞ்சமி தீர்த்த உத்ஸவம் 9ம் நாள். தீர்த்தவாரி. மாலை தங்கசேடயம் உள்புறப்பாடு, ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை. கலியன் உத்ஸவம் 1ம் நாள். மாலை ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | பஞ்சமி தீர்த்தம் உத்ஸவம்: ஶ்ரீ R. ராஜகோபாலன். 18.11.2023 முதல் 27.11.2023 வரை கலியன் உத்ஸவம் 10 நாட்களும் செட்டிபுண்யம் C.S. பார்த்தஸாரதி |
| 19/11/2023 | 3 | ஷஷ்டி / ஸப்தமி | ஞாயிறு | ச்ரவணம் | காலை பெருமாள், ஸ்வாமி தேசிகன் திருமஞ்ஜனம். மாலை வீதிபுறப்பாடு. ஸேவாகாலம், சாற்றுமுறை. கலியன் உத்ஸவம் 2ம் நாள். மாலை ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ச்ரவணம்: ஶ்ரீ ஶ்ரீனிவாஸ ராஜகோபாலன் குடும்பத்தார் |
| 20/11/2023 | 4 | அஷ்டமி | திங்கள் | அவிட்டம் | கலியன் உத்ஸவம் 3ம் நாள். மாலை ஆஸ்தானம், ஸேவா காலம், சாற்றுமுறை | |
| 21/11/2023 | 5 | நவமி | செவ்வாய் | சதயம் | கலியன் உத்ஸவம் 4ம் நாள். மாலை ஆஸ்தானம், ஸேவா காலம், சாற்றுமுறை | |
| 22/11/2023 | 6 | தசமி | புதன் | பூரட்டாதி | கலியன் உத்ஸவம் 5ம் நாள். மாலை ஆஸ்தானம், ஸேவா காலம், சாற்றுமுறை | |
| 23/11/2023 | 7 | ஏகாதசி | வியாழன் | உத்தரட்டாதி | கைசிக ஏகாதசி. காலை பெருமாள் திருமஞ்ஜனம். மாலை வீதி புறப்பாடு. கலியன் உத்ஸவம் 6ம் நாள். மாலை ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | கைசிக ஏகாதசி: ஶ்ரீ M.V. ஸந்தானம் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 24/11/2023 | 8 | த்வாதசி | வெள்ளி (2) | ரேவதி | கைசிக த்வாதசி. காலை புராண படனம். தாயார் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை தாயார் உள்புறப்பாடு, ஆஸ்தானம். கலியன் உத்ஸவம் 7ம் நாள். மாலை ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | தாயார் உத்ஸவம்: ஸ்ரீ R. ராஜ கோபாலன் கைசிக த்வாதசி புராண படநம்: ஸ்ரீமதி லக்ஷ்மி ராமபத்ரன் குடும்பத்தினர் |
| 25/11/2023 | 9 | த்ரயோதசி | சனி | அச்வினி | கலியன் உத்ஸவம் 8ம் நாள். மாலை ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | |
| 26/11/2023 | 10 | சதுர்தசி | ஞாயிறு | பரணி | கலியன் உத்ஸவம் 9ம் நாள். மாலை ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | |
| 27/11/2023 | 11 | பௌர்ணமி | திங்கள் | க்ருத்திகை | பாஞ்சராத்ர தீபம். கலியன் உத்ஸவம் 10ம் நாள். காலை பெருமாள், கலியன், தேசிகன் திருமஞ்சனம். மாலை தீபம். பெருமாள், ஆழ்வார், ஸ்வாமி தேசிகன் வீதி புறப்பாடு. ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை. இரவு தைலக்காப்பு. | திருமஞ்ஜனம்: ஸ்ரீமதி L. வத்ஸலா. மாலை வீதி புறப்பாடு: ஸ்ரீ N.S. வரதாச்சாரி குடும்பத்தினர். கலியன் உத்ஸவம்: செட்டிபுண்யம் ஸ்ரீ C.S. பார்த்தஸாரதி |
| 28/11/2023 | 12 | ப்ரதமை | செவ்வாய் | ரோஹிணி | திருப்பாணாழ்வார் திருநக்ஷத்ரம். ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீமதி சாந்தா சடகோபன் |
| 29/11/2023 | 13 | த்விதீயை | புதன் | ம்ருகசீர்ஷம் | ஸ்ரீ திருக்கச்சி நம்பிகள் | |
| 30/11/2023 | 14 | த்ருதீயை | வியாழன் | திருவாதிரை | ஸ்ரீ ராமானுஜர் | |
| 01/12/2023 | 15 | சதுர்த்தி | வெள்ளி(3) | புனர்வஸு | ஸ்ரீ குலசேகர ஆழ்வார் | |
| 02/12/2023 | 16 | பஞ்சமி | சனி | புஷ்யம் | திருமால்வடை | |
| 03/12/2023 | 17 | ஷஷ்டி | ஞாயிறு | ஆயில்யம் | திருமால்வடை | |
| 04/12/2023 | 18 | ஸப்தமி | திங்கள் | மகம் | ஸ்ரீ திருமழிசைப்பிரான் | |
| 05/12/2023 | 19 | அஷ்டமி | செவ்வாய் | பூரம் | ஸ்ரீ ஆண்டாள் | |
| 06/12/2023 | 20 | நவமி | புதன் | உத்தரம் | திருமால்வடை | |
| 07/12/2023 | 21 | தசமி | வியாழன் | ஹஸ்தம் | திருமால்வடை | |
| 08/12/2023 | 22 | ஏகாதசி | வெள்ளி(4) | ஹஸ்தம் | ஸ்ரீ கூரத்தாழ்வான் | |
| 09/12/2023 | 23 | த்வாதசி | சனி | சித்திரை | ஸ்ரீ மதுரகவிகள் | |
| 10/12/2023 | 24 | த்ரயோதசி | ஞாயிறு | ஸ்வாதி | ஸ்ரீ பெரியாழ்வார் | |
| 11/12/2023 | 25 | த்ரயோதசி / சதுர்தசி | திங்கள் | விசாகம் | ஸ்ரீ நம்மாழ்வார் | |
| 12/12/2023 | 26 | சதுர்தசி / அமாவாசை | செவ்வாய் | அனுஷம் | ஸ்ரீமந்நாதமுனிகள் | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 13/12/2023 | 27 | ப்ரதமை | புதன் | கேட்டை | பகல்பத்து 1ம் நாள் | |
| 14/12/2023 | 28 | த்விதீயை | வியாழன் | மூலம் | பகல்பத்து 2ம் நாள் | |
| 15/12/2023 | 29 | த்ருதீயை | வெள்ளி (5) | பூராடம் | பகல்பத்து 3ம் நாள் | |
| 16/12/2023 | 30 | சதுர்த்தி | சனி | உத்தராடம் | பகல்பத்து 4ம் நாள் | |
| 13.12.2023 முதல் 22.12.2023 வரை பகல்பத்து உத்ஸவம்<br>23.12.2023 வைகுண்ட ஏகாதசி<br>23.12.2023 முதல் 01.01.2024 வரை இராப்பத்து உத்ஸவம்<br>02.01.2024 இயற்பா சாற்றுமுறை<br>03.01.2024 தேசிகப்ரபந்தம் சாற்றுமுறை | | | | | | ஸ்ரீமதி எச்சம்மாள் பண்ட் |

## கார்த்திகையில் முக்கிய உத்ஸவங்கள்

| | |
|---|---|
| **பஞ்சமி தீர்த்தம் தீர்த்தவாரி**<br>நவம்பர் 18 (சனி) | **திருக்கார்த்திகை தீப உத்ஸவம், கலியன் திருநக்ஷத்ரம், தைலக்காப்பு**<br>நவம்பர் 27 (திங்கள்) |
| **கைசிக ஏகாதசி**<br>நவம்பர் 23 (வியாழன்) | **திருப்பாணாழ்வார் திருநக்ஷத்ரம்**<br>நவம்பர் 28 (செவ்வாய்) |
| **கைசிக த்வாதசி**<br>நவம்பர் 24 (வெள்ளி) | **அத்யயன உத்ஸவம் (பகல் பத்து)**<br>டிஸம்பர் 13 (புதன்) முதல் 22 (வெள்ளி) வரை |
| **விசேஷ தீப உத்ஸவம்**<br>நவம்பர் 26 (ஞாயிறு) | **தநுர் மாத ஆராதனம் ஆரம்பம்**<br>டிஸம்பர் 17 (ஞாயிறு) |


## ஆஸ்திகர்கள் கவனத்திற்கு

பரமபத ப்ராப்தி அடைந்தவர்களுக்கு
12 நாட்கள் வரையிலான கைங்கர்யங்களைச் செய்யும் வகையில்,
ஆறு பகுதிகளுடன், நம் தேவஸ்தானத்தின்
**'ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்'** இயங்கி வருகிறது.



**முகவரி மற்றும்**
**விவரங்களுக்கு:**
**'ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்'**
9/5, வேங்கடேச அக்ரஹாரம் தெரு, மயிலாப்பூர்,
சென்னை – 600004. போன்: 044 – 4322 9401.

**நிர்வாகம்:**
ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்,
மயிலாப்பூர், சென்னை – 600004.

**Sponsorships and donations towards publication expenses are welcome**

ஸ்ரீ:

# மிகத் துணிவு பெற உறவு குணம் உணர்க!

ஸ்ரீ உ.வே. ஸ்ரீரங்கம் M.S. ராஜகோபாலாசார்ய ஸ்வாமி

(ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானத்தின் 1975-ம் ஆண்டு ஸம்ப்ரோக்ஷண மலரில் வெளிவந்த வ்யாஸம்)

நாம் விரும்பினால் பெருமாள் நம்மை ரக்ஷிப்பர் எனும் உறுதியான துணிவு சரணாகதி பண்ணுமவர்க்கு அவச்யம் இருக்க வேண்டும். வ்யாதி நீங்கும் போது மருந்தின் பங்கை விட நம்பிக்கையின் பங்குதான் அதிகம் என்பதை யாவரும் அறிவர்.

ஆனால் சரணாகதி பண்ணுமவர்க்கு இந்த மிகத் துணிவு அதாவது மஹா விச்வாஸம் வருவது எளிதல்ல. மஹாவிச்வாஸம் பிறக்கையின் அருமையை நினைத்து ஸ்ரீ எம்பார் ''பக்தி யோகத்தை விட பரந்யாஸம் மிகக் கடினம்'' என்று அருளிச் செய்தாராம்.

இந்த உறுதியான நம்பிக்கை பிறவாமல் செய்வன எவை, அதற்குப் பரிஹாரம் யாது என்பதை ஸ்ரீ தேசிகன் தமது பல க்ரந்தங்களில் தெளிவாக விவரித்துள்ளார். இதைச் சுருக்கமாக இங்கே நினைத்துப் பார்ப்போம்.

(1) பெருமாள் நம்மை ஸம்ஸாரியாக்கித் தண்டிப்பதன் காரணம் நாம் செய்த அளவற்ற தீவினைகள். இதை அவர் அறிய மாட்டார் என்றோ அறிந்தாலும் உரிய தண்டனை அளிக்கமாட்டாரென்றோ நாம் விச்ராந்தியாக இருக்க முடியாது. அவர் ஸர்வஜ்ஞர்; ஸர்வசக்தருமாவர். எனவே அவரிடம் நெருங்கவே நாம் பயப்படும்போது சரணாகதி தான் எப்படி? என்று ஒரு கேள்வி எழுகிறது.

இதற்குப் பரிஹாரம்:- ஏதாவது காரணம் காட்டிப் பிறரை நலியும் ஆஸுர ஸ்வபாவம் பெருமாளுக்குக் கிடையாது. பிறரை தண்டிக்கும் போதும் அவர் வேதனைப்படுகிறார் என்பதை ஸ்ரீராமாயணத்தில் **ஸஞ்ஜாத பாஷ்ப: பரவீரஹந்தா** (எதிரியாகவே நிற்கும் வீரனை அழிக்கிறவராய்க் கண்ணீர் மல்கும் ஸ்ரீராமன்) என்று வால்மீகி பகவான் ஸூக்தி அறிவிக்கிறதல்லவா? தண்டிக்காமல் போனால் ஜீவராசிகள் திருந்த மாட்டார்கள். தானே தண்டிப்பதும் தானே கருணை காட்டுவதுமாயிருந்தால் இந்த தண்டனைக்கும் கருணைக்கும் பொருளில்லாமல் போகும். 'இந்தக் கருணை நற்பண்பாகாது; இது கையாலாகாததனத்தையே காட்டும்' என்று எம்பெருமானார் வார்த்தை. ஆகவே வல்வினை தீர்க்கும் கண்ணன் இதற்குரிய 'ஆற்ற நல்ல வழியை' அழகாகத் தானே வகுத்து வைத்துள்ளார்.

இயற்கையாகவே அனைவரிடமும் பேரன்பு கொண்ட பெருமாள் தானே அவர்கள் திருந்தச் செய்துள்ள வாய்ப்புக்கள் பலவற்றில் ஏதேனும் ஒன்றின் துணையால் தற்செயலாக நல் வினையாக ஆகும் ஏதேனும் ஒரு பணியை இந்த ஜீவன் செய்யவே அவன் மறுபிறவியெடுக்கும்போது அவனை அருளுடன் பார்க்கிறான். அதனால் நல்லோரிடம் த்வேஷம் நீங்கி அவர்களுடன் நெருங்கிப் பழகி அவர்கள் அறிவுரை கேட்டு நல்ல ஆசார்யனை அணுகி, உண்மையான பொருளையும் உயரிய புருஷார்த்தத்தையும் உரிய உபாயத்தையும் இந்த ஜீவன் அறிந்துகொள்ளுகிறான். இந்த புருஷார்த்தத்தைத் தருகிறவனாகப் பெருமாளைச் செய்யவல்லவள் எல்லார்க்கும் தாயாரான பெரியபிராட்டியார் என்பதையும் தெரிந்து கொள்ளுகிறான். (புருஷன்: உயர்ந்த பலனை அளிப்பவன்; புருஷகாரம்: உயர்ந்த பொருளை அளிப்பவனாகச் செய்பவர்) இதற்காக உடனே பிராட்டியாரிடம் புருஷகார சரணாகதி செய்கிறான். அவளும் பெருமாள் மாதிரியே குற்றமுள்ளவர் தம்மிடம் நெருங்கமுடியாதபடி பயங்கரமாக இருப்பவளோ என்று நினைக்கவும் முடியாதபடி தண்டிப்பதையே அறியாதவளாய் கருணையே வடிவாய் உள்ளவள். ஏனெனில், குற்றமுள்ளவரை தண்டிப்பதுபோன்ற ஆண்மகனுக்குள்ள பண்புகளைப் பெருமாளும், பொறுத்தல், மென்மை போன்ற பெண்ணிற்கே உரிய பண்புகளைப் பெரிய பிராட்டியாரும் கூறு போட்டுத் தங்களுடையதாக ஏற்றுக் கொண்டனர்' என்று ஸ்ரீபராசர பட்டர் அருளிச் செய்திருக்கிறார்.

இப்படி இவன் செய்த புருஷகார சரணாகதியை ஏற்று. பிராட்டியும் திருமுகப் பாசுரமருளிப் பெருமாளிடம் நாம் கூசாமல் நெருங்கும் தைர்யத்தை அளிக்கிறாள். எப்படி என்றால் நமது உரையைக் கேட்டதும் நமது நிலையைப் பெருமாளிடம் கூறி அவரை நம் பக்கம் சீற்றமின்றி அருள் நோக்குள்ளவராகச் செய்து விடுகிறாள்.

நாம் அநாதி காலமாகச் செய்த எண்ணற்ற தீவினைகளை அவர் அறிந்தவராகவே தம்மைக் காட்டிக் கொள்ளாமல் நம்மிடம் பரிவு கொள்ளுகிறார். இதனால் அவருக்கு **அவிஜ்ஞாதா** (அறிவற்றவர்) என்று ஸ்ரீ பீஷ்மர் திருநாமமிட்டார்.

(2) நாம் அநந்த அபராதங்கள்செய்து மிக இளப்பமாக நிற்கிறோமே! இவற்றிற்கு அவர் பலம் தராமல், ப்ரஹ்ம சிவாதிகளுக்கும் கிட்டாத மிகச் சீரிய நலமந்தமில்லதோர் நாட்டில் நம்மைப் புகவைப்பாரா? என்று கேழ்க்கலாம். இதற்குப் பரிஹாரம்: நாம் யார்? பெருமாளுடைய குலதொலடியார்களல்லவா? ஸ்வாமியான பிதாவின் சொத்திற்குத் தாஸனான புத்ரன் பங்கு பெற பாத்தியதை (உரிமை) உள்ளவன்தானே!

ஒருயோக்யதையும் இதற்குத் தேவையில்லை. தன் மகனுக்குச் சிங்காதனத்தை அளிக்கும் அரசன் ஸேனாபதி போன்ற பொறுப்புள்ள பதவியை அவனுக்குக் கொடுக்கும்போதுதான் அதற்குரிய படிப்பையும் பயிற்சியையும் எதிர்பார்க்கிறான்.

(3) நாம் செய்யும் சரணாகதி மிக மிகச் சிறியதான ஒருசெயல். இதனால் பெருமாளுக்கு எந்தக் குறையும் நீங்குவதில்லை. அவரோ குறையேதுமில்லாதவர். பிறரிடம் எதையும் எதிர்பார்த்து நிற்பவரல்ல. அப்படி இருக்க இச்சிறு பணியால் அவரைத் திருப்திப் படுத்தி மிகப் பெரிய பலனை எப்படி அடைவது என்று கேட்க வேண்டாம். ஸௌஜன்யம் மிக்க பேரரசன் தன்னைப் பேட்டி காணவந்தவன் அன்புடன் அளிக்கும் எலுமிச்சம் பழத்தை உவகையுடன் ஏற்றுக் கருணையால் அவனுக்குச் சிறந்த பரிசளிப்பதை நாம் பார்க்கிறோம். அதுபோல் சரணாகதி மந்த்ரத்தை முறைப்படி உச்சரிப்பதையே வ்யாஜமாகக் கொண்டு கருணையால் பெருமாளும் மோக்ஷமளிக்காமல் இரார்.

(4) சரணாகதி செய்பவனுக்கு விரும்பிய தருணத்தில் மோக்ஷமளிக்கிறார் பெருமாள் என்கிறார்களே. பிற தேவதைகள்தான் கடுகப் பலனளிக்கிறார்கள். பெருமாள் தாமதித்தே பலனளிப்பார் என்று ஸ்ரீகீதை சொல்லுகிறதனால் இது எப்படி கூடும் என்று ஸந்தேஹப்படவேண்டாம். பொறுப்பற்ற அயலகத்துப் பெண்கள் கேட்டதும் தம் குழந்தைக்குத் தின்பண்டங்கள் தருகிறார்களானாலும்,

நாம் அவர்க்குத் தகுதியின்மையை உணர்ந்து குழந்தைகளே மறந்து போகட்டும் என்றெண்ணித் தாமதித்துப் பார்த்துப் பின் பிடிவாதம் மாறாதிருக்கவே வேறு வழியின்றி அவற்றைத் தருகிறோம். ஆனால் மருந்தையும் மற்ற பத்தியங்களையும் கேட்ட உடனே கொடுத்து விடுகிறோம். அப்படியே இறைவன் அக்நிஹோத்ரம் முதலியவற்றைச் செய்து ஸ்வர்க்கம் போன்ற பயனை விரும்புகிறவர்களுக்குத் தாமதித்தே பலன் தருகிறான். அவர்களே இந்த அற்பப் பலனை வெறுத்து வேண்டாம் என்று சொல்ல அவகாசம் தருகிறான். மோக்ஷத்தையோ கேட்டதும் தருகிறான். இதுவும் வேண்டாமென்று சொல்லும்படி அவர்கள் மனத்தை மாற்றிக்கொள்ள இடம் கொடுக்காமல் விண்ணுலகம் தருவானாய் விரைகின்றான்.

(5) பெருமாள் ஒத்தாரும் மிக்காருமில்லாதவர். நாமோ அற்பர். நம் தரத்தைப் பாராமல் அவர் மோக்ஷமளிப்பாரா என்றும் கேட்கலாகாது. ஏனெனில் பெருமாள் ஸ்வதந்தரர். பிறருக்கு நல்லது பண்ணி அவர்கள் மகிழ்ந்தால் தானும் மகிழ்பவர். பிள்ளைக்கும் கிளிக்கும் பாலூட்டி மகிழ்ச்சியுறும் தனிகன் போன்றவர். நம் சரணாகதிக்குப் பலனளித்து நம்மை வைகுந்தத்தேற்றும்போது தான் பெறற்கரிய பேறு பெற்றுவிட்டதாகப் பெருமாள் நினைப்பவர். ஸ்ரீவிபீஷணாழ்வான் லங்கா ராஜ்யத்தில் முடி சூட்டப் பெற்ற பிறகே கவலை நீங்கி மிகவும் மகிழ்ந்தார் ஸ்ரீராமபிரான்.

இங்கு நாம் மிக முக்கியமாகக் கவனிக்க வேண்டுவது ஒன்றுண்டு.

உலக வாழ்க்கையில் நமக்கேற்பட்ட பழக்கம் காரணமாகக் கீழ்க் கூறிய ஸந்தேஹங்கள் தோன்றினால் இவற்றை மாற்றவல்ல மாற்றுப் பழக்கங்களும் உலகில் உள என்பதைக் காட்டவே இது வரையில் சொன்னது. சரணாகதி பலனளிக்கத் தவறாது என்ற உறுதி எதனால் பிறக்கும் என்றால் சாஸ்த்ரம் கூறுவது பொய்யாகாது என்ற உறுதியினால் என்றும் ஸ்ரீதேசிகன் அருளிச் செய்கிறார்.

எனவே இவ்வைந்தும் நீங்கப் புருஷகாராதிகள் ஐந்தையும் உணரவேண்டும்.

| | தண்டிப்பதற்கு ஹேது | | ரக்ஷிப்பதற்கு ஹேது | |
|---|---|---|---|---|
| 1 | பெருமாளின் சக்தியும் அறிவும் | நம் தீவினைகள் | மறுக்கமுடியாத புருஷகாரம் | பெருமாள் பாபத்தை காணாதவர் போலாவது |
| 2 | பெருமாள் வினைக்கேற்ப பலனளிப்பது | நம் தீவினைகள் | நிலைத்த உறவு | பெருமாள் சொத்தில் பங்களிக்க வேண்டியவராதல் |
| 3 | பெருமாள் குறைவற்றவர் | நம் பணியின் சிறுமை | காருண்ய வாத்ஸல்யாதிகள் | சிறியதை பெரிதும் மதிக்கும் பெருந்தன்மை |
| 4 | பிற தேவதைகளுடன் வேறுபாடு | விரைவில் (அற்ப பலனை) அளிக்காமை | மோக்ஷார்த்தமான ஜகத்ஸ்ருஷ்டி | கோலின காலத்தில் ரக்ஷிப்பது |
| 5 | பெருமாளது மிக உயர்த்தி | நமது மிக இளப்பமான தன்மை | பிறர் உஜ்ஜீவனத்தையே பலமாகக் கொண்டு செயல் ஆற்றுவது | ஜீவன் மோக்ஷமடைவதைத் தன் பேறாகக் கருதுவது |

ஸ்ரீ:

# Important Tenets Of Our Sampradaya (8)

## Devotion Is Fine, But Adherence To Saasthras Is As Important

Sri U. Ve. Natteri P. Srihari (a) Lakshmi Nrusimhacharyar Swami, Mylapore

Dear Fellow-Bhagavathas,

The wonderfully-divine ambience prevalent during the recently-concluded Pavithra Uthsavam at the Temple with the participation of hundreds of devotees each session offered a fine perspective. It was especially and expectedly intent on the day of Purnahuthi (5th October, 2023) when people from even far-flung places waited till midnight to have a glimpse of the grand spectacle.

To realise that devotion is progressively on the ascent is really comforting. A big chunk of the credit for this welcome state should, no doubt, go to the multi-media programmes that feature discourses and pilgrimage serials. So much so, it has now become a cult to visit as many Divyadesams as possible. Neither the distance nor the cost is a deterrent as there is a craving to set foot in Salagramam situated in the neighbouring Nepal. It is the same with Ayodhya, Badrinath, Mathura, Dwaraka, etc.

There is an ever-increasing interest in religious activities, big crowds in temple festivals and live discourses and phenomenal upsurge in philanthropy. There is greater awareness and interest than ever amongst youngsters to undergo Pancha Samskaram and Bhara Samarpanam. There is tremendous enthusiasm in learning the great works of Azhwars and Acharyas. One can sense reinforced faith in God, Acharyas and our famed tradition. Parents' intent and sincerity in performing Upanayanam to their wards is truly remarkable.

All this is fine. But, on the flip side, do we give due importance to observance of Karmas? The answer cannot be in the affirmative, unfortunately. For instance, what happens after Upanayanam? Do the parents inculcate in the young mind the value of performing Sandhyavandanam thrice-a-day regularly? In how many households elders do it? Should they not lead by example? While there are no explicitly-stated benefits in observing Sandhyavandanam, it surely enhances the Thejas (personality). It is a well-established fact that Pranayamam, which is an integral part of Sandhyavandanam, is good for health. But failing to do Sandhyavandanam will incur the wrath of the Lord and invite punishment.

Similarly, one should overcome the reluctance in going to school/college/work place wearing the Thiruman. One should consciously wear the proper attire as applicable to one's Asramam (Brahmachari, Gruhastha, etc.) at least while doing Karmas, and visiting temples. Learning and performing Thiru Aradhanam at home is very imperative. As applicable, Naimiththika (obligatory) Karmas like Tharpanam, Sradhdham, etc. should be diligently performed.

Religious faith and practical observance of deeds prescribed based on that faith are quintessential elements of any Vedic philosophy. Both must go hand in hand to yield the best fruits. One without the other is incomplete. Saasthras and their observance are the Lord’s ordains and hence must be respected and followed as much as the Lord. He has spoken through the Saasthras consisting of Sruthi (the Vedas) and Smruthi (regulations), spelling out his preferences and orders. He has announced it specifically in His Gita (ச்ருதி: ஸ்ம்ருதிர் மமைவாஜ்ஞா).

The first two of the five constituents in performing Prapaththi are 'Anukoolya Sankalpam' (doing things that will please the Lord) and 'Praathikoolya Varjanam' (avoiding things that will displease Him). One must always remember this and strive his/her best to follow the Saasthras, which only will please the Lord. It is impracticable to follow everything to the letter, but that should not impede serious intent and sincere effort. If there is any shortcoming in spite of that, an honest repentance will earn the Lord's pardon.

It will require a conscious and consistent effort. But we have no choice, do we? So, let us try and please the Lord as much as we can and leave the result to Him. Sure, He will not let us down!

*(to be continued…)*

ஸ்ரீ:

# Srimath Rahasya-Thraya Saaram

## A Manual For Beginners ⑧

Smt. Padmalatha Sridharan, Chennai

**Chapter - 7**

**Mumukshutva Adhikaram**

Once a Chetana learns about his Svarupa, Svabhava, etc., he realises that his Atma is totally different from his body, and that his Atma has inherent qualities of Jnaanam, Anandam, etc. He begins to question his Karma Phalan and wishes to break away from the cycle of births and deaths. When he is entitled to ascend Sri Vaikuntam by virtue of his blemishless Svarupa, he remains in the cycle of Samsara, and might even have to go to hell because of his Karmas and, hence, he begins to analyse the means to escape this vicious circle. He is dependent upon, supported or held by and controlled by Isvara, he has very limited power, his knowledge is adversely affected by misconceptions and once he realises the difference between this state and being able to do Bhagavat Kainkaryam in Vaikuntam which is his birth right, he becomes a Mumukshu – one who wishes for Moksha. The root verb of Moksha means escape and one who wishes to escape Samsara is a Mumukshu.

There are five ways in which Ahankara and Mamakara of the Jeeva can be overcome by meditating upon the concepts as shown in the Ashtaakshara Manthra. The 'M' and the hidden fourth clause in Pranava, the 'Ma' in Namo, the 'Nara' in Narayana, the 'Aaya' Sabdha in the last part. This is explained in a beautiful way by Sri Parashara Bhattar (son of Sri Koorathazhwan) as an imaginary dialogue between Namperumal in Srirangam and a Jeeva. Ranganatha is wearing wet Peethambaram and just Thulasi garland after Thirumanjanam and he is showing his Abhaya Hastham in front of an oil lamp (Thiruvilakku).

**Ranganatha:** You are mine and you belong to me.

**Jeeva:** No. I belong to myself.

**Ranganatha:** How do you say that?

**Jeeva:** How did You say it?

**Ranganatha:** I am saying it on the authority of the Vedas.

**Jeeva:** I said it on the authority of my own experience.

**Ranganatha:** Your experience has been disputed.

**Jeeva:** When and by whom?

**Ranganatha:** I know it has been disputed in works like Bhagavath Gita, Pancharatra, etc.

**Jeeva:** Who is a witness for this dispute?

**Ranganatha:** Great sages like Vyasa and Parasara.

**Jeeva:** Alas! they are prejudiced in your favour.

Then, Ranganatha in the absence of neutral witnesses, raised His hand and swore to the truth in the time-honoured way against Agni (flame of the lamp). It is thus Parasara Bhattar beautifully conceptualises the Thirumanjana Kolam in a Sloka.

Once a Jeeva realises that he is not independent, he is not the beneficiary of his functions, and his Ahankara and Mamakara are destroyed, he learns the insufficiency of other Purusharthams like Aiswaryam, Kaivalyam, etc., as they are a mixed bag of pleasure and sorrow or of negligible pleasure when compared to the Bhagavath Anubhavam and, hence, let's go of his desires in material things and transfers his desire to Bhagavan. There are two types of functions: Pravrutthi Dharmam and Nivrutthi Dharmam. Pravrutthi is for obtaining a benefit while Nivrutthi is for attaining Moksha. A Mumukshu is one who takes up Nivrutthi Dharma.

He would be a laughingstock if, after learning all this, he wishes for a temporary, ephemeral benefit. He will lose his stature if he disregards the Saasthras and indulges in contemptible pleasures.

On the other hand, if he wishes to perform Kainkaryams to Paramaathma as per Saasthras, he is called a Mumukshu and is worshipped by the Devas.

*(to be continued…)*







நவராத்ரி உத்ஸவம்





நவராத்ரி உத்ஸவம்



ஸ்ரீ:





நவராத்ரி உத்ஸவம்







நவராத்ரி உத்ஸவம்



ஸ்ரீ:

கண்ணுக்கினியன





விஜயதசமி பார்வேட்டை





ஸேனைநாதன் திருநக்ஷத்ரம்





ஸ்ரீ:





ஸ்வாமி தேசிகன் 27-ம் நாள் விடாயாற்றி உத்ஸவம்





பொய்கையாழ்வார் திருநக்ஷத்ரம்








பூதத்தாழ்வார் திருநக்ஷத்ரம்








பேயாழ்வார் உத்ஸவம்

ஸ்ரீ:


பேயாழ்வார் திருநக்ஷத்ரம்









பேயாழ்வார் திருநக்ஷத்ரம்








பௌர்ணமி புறப்பாடு

ஸ்ரீ:





## டோலோத்ஸவம்















## டோலோத்ஸவம்











## தீபாவளி உத்ஸவம்







ஸ்ரீ:

# பிள்ளைத்தமிழுக்கு வித்திட்ட பெரியாழ்வார் (16)

ஸ்ரீ உ.வே. புதுஅக்ரஹாரம் S. பார்த்தஸாரதி ஸ்வாமி, பெங்களூரு

வெண்ணெயளைந்த என்ற திருமொழி முதல் வெண்ணெய் விழுங்கி என்ற சென்ற திருமொழி வரையிலும் ஆறு திருமொழிகளால் கண்ணனுக்கு நீராட்டம் முதல் திருவந்திக்காப்பிடும் வரையிலுள்ள அனுபவங்களை அருளிச்செயதார். இத்தசகத்தில் கண்ணனைப் பக்கத்தில் படுக்கவைத்து அவன் உறங்கி எழுந்தவளவிலே திருவாய்ப்பாடியிலுள்ள பல பெண்மணிகள் கண்ணன் செய்த தீம்புகளைப் பொறுக்கமாட்டாமல் தாயான யசோதையிடம் முறையிடுதலையும் அவள் கண்ணனைக் கூப்பிட்டுக்கொள்வதையும் பெரியாழ்வார் அனுபவிக்கிறார். ஒரு பாசுரம் முறையிடும் பெண்ணின் பேச்சாகவும் அடுத்த பாசுரம் யசோதை கண்ணை அழைப்பதுமாக அமைத்திருப்பது அழகு!

முதல் பாசுரத்தில் ஒரு ஆய்க்குலப்பெண் யசோதையிடம் முறையிடுவதாக ஆரம்பிக்கிறார். யசோதை நங்காய்! உன் மகன் கண்ணன் ஒரு வித்தையைக் கற்று வைத்திருக்கிறான்! அது புதுவித திருட்டுவித்தை! திருடி உண்கின்றவன் உண்டது தெரியாமல் செய்துவிட்டுப் போவது திருட்டுவித்தை என்று சொல்லலாம். தான் திருடுவது தெரிந்து ஆய்ச்சிமார்கள் ஓடி வந்து பார்க்கவேண்டும் என்றே திருடி உண்டபின் வெறுங்கலத்தைப் பாறையில் எறிந்து அதன் ஓசையைக் கேட்டு உவக்கிறான். இந்த புதுவித வித்தையை யாம் இதுவரை அறிந்ததில்லை. இதை எத்தனை நாட்கள் பொறுப்பது? நான் கண்டித்து வைக்கிறேன் என்று சொல்லாமல் இப்பொழுதே கூப்பிடு! வெண்ணெய் போவது மட்டுமல்ல; பாத்திரமே போய்விடுகிறது! இது புண் உண்டு பண்ணியதோடு நில்லாமல் அதில் புளியையும் பிழிந்தாற்போல் இருக்கிறது. ஒருவீட்டில் சப்தம் கேட்டு அதனைப் பார்க்க யார் போகிறார்களோ அவர்கள் வீட்டிலும் அவ்வண்ணமே செய்கிறான். ஆயர்பாடிப் புருஷர்களுக்கு அடங்குகிறவன் இல்லை. எங்கள் அனைவருக்கும் ஸ்வாமியான நந்தகோபருக்கும் அடங்குகிறவனாகத் தெரியவில்லை. உன் மகனைப் போல மகன் யாருக்கும் இல்லை. பெற்றவளிடம் முறையிடுவதைத் தவிர வேறொன்றும் செய்வதறிகிலோம். ஏதாவதொரு நல்வார்த்தைச் சொல்லி அவனை உன் அருகில் அழைத்துக்கொள்வாயாக! என்கிறாள். அண்ணற்கண்ணான் என்று பெரியாழ்வார் கண்ணனைக் குறிப்பிடுகிறார். நந்தகோபரைக் கருதாதவன் என்ற பொருளொடு, ஸ்வாமித்வத்தைக் குறிப்பால் காட்டும் கண்களை உடையவன் என்ற பொருளும் தேறும். அதோடு அண்ணனான பலராமனுக்கு ஒவ்வாதவன்;



அவனைப் போல் நற்குணமில்லாதவன் என்றும் பொருள் சொல்லலாம்படியும் அருளியுள்ளார்.

அடுத்த பாசுரத்தில் தன் மகனின் பெருமையை இந்த இடைச்சியர் அறிந்திலர், அல்லது அறிந்தும் அவன் செய்வது பொறுக்கமாட்டாமல் முறையிடுகிறார்கள் என்று நினைத்துத் தன்மகனின் பெருமையைப் பேசித் தன் பாபத்தையும் நொந்துகொண்டு கண்ணனை அழைக்கிறாள். தன்னிடம் கண்ணனைப் பற்றி முறையிட்டவளை நங்காய்! என்று விளிக்கிறாள். பின் கண்ணனை நோக்கி, வருக, வருக! விரைந்து நம் அகத்திற்கு வருக! வாமனாவதாரம் செய்த குணபூர்ணனே! இங்கே வருக! கரிய கூந்தல் சிவந்த திருப்பவளம் இரண்டு சேர்த்தியை உடைய ககுத்ஸ வம்ஸத்தில் தோன்றி காகுத்ஸன் என்று கொண்டாடும்படியான குணபூர்ணனான இராமனே வருக! என்றழைத்துப் பின் அந்த இடைச்சியை நோக்கி இவன் எனக்கு மிகவும் அருமையானவன் என்று சொல்லி மீண்டும் கண்ணனிடத்தில் மை போன்ற நிறமுடைத்தவனே உன்னை பிறர் அவதூறு பேசுவது எனக்குத் தாங்கமுடியவில்லை. பாவம் செய்திருக்கும் எனக்காக இங்கே வந்துவிடுவாயாக என்று கூறுகிறாள். இதில் இரண்டு அவதாரங்களைச் சொல்லி விளிக்கிறாள்.

ஒன்று வாமன நம்பீ!; மற்றொன்று காகுத்த நம்பீ! மூவுலகும் தன்னதாயிருக்கத் தானே எடுத்துக் கொள்ளாது, இந்திரனுக்காக மாவலியிடம் தான் குறுகிக் குறைந்து யாசித்துப் பெற்றானல்லவா! அவன் கல்யாண குண பரிபூர்ணன்! அது தேவதாவதாரம் என்றால் அடுத்து பரிபூர்ணாவதாரம். அதில் அயோத்தியில் யார் வீட்டிலாவது நுழைந்து ஏதாவது எடுத்து உடைத்தச் சரிதையுண்டா? தன் இன்னமுதத் திருமகளை ஒருவன் காட்டில் திருடிக்கொண்டு சென்றபோதிலும் தனது காகுத்த வம்சத்திற்குத் தகுந்தபடி நேரில்சென்று சண்டையிட்டு அவனைச் சாகடித்து மீட்டு வந்தானல்லவா? திருட்டுத்தனமாகப் பெறவில்லையே! இப்படியிருக்க இந்த ஆயர்குலம் மட்டும் திருட்டுக் குலமா? அந்தத் தாய்மார்களைப் போல நானும் பேர்பெற வேண்டாமா? பாவியேனுக்கு இவன் கிடைக்கத் தகுந்தவனா? என்று யசோதையின் அங்கலாய்ப்புத் தோன்ற விளிகளை அமைத்திருப்பது பேரழகு!



மூன்றாவது பாசுரத்தில் தன் தீம்பைத் தாயாரிடம் சொல்வதற்குள் தான் வீடு புகவேண்டும் என்று விரையும் கண்ணனுக்கு முன்னே, அவன் எம்பெருமான் என்ற தெளிவுடைய ஒருத்தி, முறையிட வந்திருப்பதைக் கண்டவுடன் தூரத்தில் மறைவாக நிற்கிறான். அப்படி நிற்பவனை அழைக்குமாறு அவ்விடைச்சி கோரிக்கை வைப்பதை விவரிக்கிறார். வந்த இடைச்சி, யசோதை நங்காய்! தீய நடத்தையில் சிறிதும் தேக்கம் இல்லாதவனும், செய்யும் தீம்பால் பிறரைக் கவரும் தேஜஸ்ஸை உடையவனும், செல்வமுடைய பிராட்டியை உடையவனுமான உன் பிள்ளையன்றோ உருகுவதற்காக அடுப்பில் வைத்திருந்த வெண்ணெயைக் குடத்தோடு எடுத்துப் பூரணமாய் உறிஞ்சிக் குடித்துவிட்டுக் குடத்தையும் உடைத்துவிட்டுப் பக்கத்தில் நிற்பவரிடத்திலும் அதரங்களைத் தொட்டு அநியாயம் செய்தான். இது நியாயமோ? இப்போது இங்கு வந்து நின்று விட்டான். உனது மகனை உன்னிடத்திலேயே வரவழைத்துக்கொள். இல்லையென்றால் இந்த மதுசூதன் எங்களை எங்கள் குலத்திலே வாழ விடமாட்டான், என்று முறையிடுகிறாள்.

இப்படி விபவம் வரையில் இவனது பெருமையை அறிந்த இடைச்சியிடம் யசோதை அர்ச்சையாக அவதரித்து விளங்குபவனும் இவனே என்று உணர்த்தி அவனை அழைத்துச் சொன்னவாற்றை விரிப்பதாக நான்காம் பாசுரத்தை இடுகிறார் பெரியாழ்வார். மேக வண்ணனே! இங்கே உடனே வருவாயாக! ஸ்ரீரங்கத்தில் இருக்கும் எனது மகனே! இங்கே வருவாயாக! வீசும் அலைகள் சூழ்ந்து மோதும் திருப்பேர் என்னும் திருப்பதியிலே பள்ளி கொண்டுள்ள ஸ்ரீமந் நாராயணனே! இங்கே வருவாயாக! அங்கே என்னைப் போல் ஒரு ஆய்ச்சியே உன்னைக் கண்டதுமே உன் எதிரில் போய் உன்னைப் பரிவுடன் எடுத்துத் தன் இடையில் வைத்துக்கொள்கிறாளே இதற்கு நீ பயின்ற கல்விதான் எவ்வகையானது?

இப்படி அரங்கன் முதலான அர்ச்சாரூபங்களை யசோதை உணர்த்தியவுடன் அந்த இடைச்சிப்பெண் இப்படி ஒரு மூர்த்தியைக் கொண்டு அர்ச்சாரூபத்தில் இருப்பது இருக்கட்டும்; அவன் மூர்த்தியேயின்றி திருவாராதனத்தையும் எதிர்பார்க்காமல் நித்யஸாந்நித்யம் கொண்டிருக்கும் சாளக்ராமத்தையும் நாங்கள் அறிந்திருக்கிறோம். ஆனாலும் குற்றத்தை எங்ஙனம் கூறாதிருப்பது? என்று கேட்க, அடுத்தவள் அடியே யசோதாய்! உன் பேச்சு ஆலைக் கரும்புபோல் இனியதாய் இருக்கிறது! குணபூர்ணையானவளே! நான் பாலெல்லாம் கறந்து அடுப்பின் மேல் வைத்துவிட்டுப் பலவகையாக வளை அணிந்திருக்கும் என் பெண்ணையும் அப்பாலுக்குக் காவலாக வைத்துவிட்டு நெருப்புவேண்டி மேற்குத் திக்கிலிருக்கும் வீட்டிற்குப் போய் ஒரு க்ஷணகாலம் பேசி நின்றேன். அதற்குள் சாளக்ராமத்தில் நித்ய ஸாந்நித்தியம் செய்யும் குணபூர்ணனான கண்ணன் அழகாக அமர்ந்து பானையை வாயில் சாய்த்துப் பாலைக் குடித்துவிட்டு வெளியே சென்றுவிட்டான். உன்மகன் கண்ணனை இப்போதே கூவியழைப்பாய்! என்கிறாள் ஐந்தாம் பாசுரத்தில்.

ஒரு இடைச்சி சாளக்ராமமுடைய நம்பி என்றவுடன் யசோதைக்கு சாளக்ராமமூர்த்தியாய் எம்பெருமான் வேங்கடத்தில் நின்றது நினைவுக்கு வர, அந்த எம்பெருமான் அவனாய் அவதரித்திருப்பதையும் நினைந்து, அக்கண்ணனை அழைக்கும் பாசுரமாக ஆறாம் பாசுரத்தை இடுகிறார். சீராட்டுதலைப் பெறும் மகனே! கோவர்த்தனத்தை எடுத்துக் கையில் ஏந்தியவனே! குடங்களுடன் ஆடும் கூத்தில் வல்லவனே! ஸர்வவேத ப்ரதிபாத்யனே! எனது திருவேங்கடத்தானே! ஆச்சர்ய மாயனே! வந்து சேர்வாயாக! நம் இல்லத்திற்கு வந்து சேர்வாயாக! வரமாட்டேன் என்று அடம்பிடிக்காமல் வந்து சேர்வாயாக! பிற மனையிலுள்ளோர், வாக்குக்கு எட்டாத உன் மேன்மையைச் சொல்வதுபோல் தொடங்கி சொல்லத் தகாதவையெல்லாம் ஏறிட்டுப் பேசும்பொழுது என் காது கொடுத்து நான் கேட்க மனம் தாங்கவில்லை. உடனே இங்கே வாராய் என்கிறாள்.

இனி ஏழாம் பாசுரத்தில் கண்ணன், சமைத்த பதார்த்தங்களான அன்னம், பாயசம் போன்றவற்றை

எடுத்து உண்டு நின்றான் என்று முறையிடும் பாசுரத்தை வைக்கிறார். குணம் நிரம்பிய யசோதாய்! எம்பெருமானுக்கென்று சுத்தமாய்ச் செய்த சிவந்த நெல்லாலான அரிசி, சிறு பருப்பு, கருப்பங்கட்டி, மணமுள்ள நெய், பசும்பால் இவைகளைக் கொண்டு பன்னிரண்டு மாதம் திருவோண நன்னாளில் சமைத்த நான் முன்னமே இச்சிறுவன் கண்ணனின் நடத்தையை அறிந்திருக்கிறேன். இது போதாது இன்னும் நான் மகிழ்வேன் என்று இப்போது செய்துவைத்திருந்தது எல்லாம் விழுங்கிவிட்டு இங்கு வந்து நின்றான். இப்போது நான் சொன்னதெல்லாம் சிலவே; இன்னும் இருக்கின்றன. உன் மகனைக் கூவிக் கொள்ளாய்! என்று ஒரு இடைச்சி முறையிடுகிறாள். குட்டனே! என்றும் வேங்கடவா! என்றும் விளிப்பதாலே யசோதை தானே வகுளமாலிகையாக வந்து திருவேங்கடமுடையானாய் அவதரித்த கண்ணனைத் தாய்போல் நின்று வளர்த்து கிருஷ்ணாவதாரத்தில் தான் செய்து வைக்கப்பெறாத விவாஹத்தையும் செய்து வைத்தமையையும் இணைத்து ஆழ்வார் அனுபவித்திருப்பதாக நம் பூர்வாசார்யர்கள் ரஸிப்பர்!

எட்டாம் பாசுரத்தில் யசோதை இவளுக்கு பதிலுரைக்கிறாள். யசோதையாக பதிலுரைக்கும் பெரியாழ்வார் திருவோணத் திருவிழவில் எம்பெருமானுடைய பரத்வத்தை ஸ்தாபித்தவர் ஆகையால் ஏழாம் பாசுரத்தில் வந்த இடைச்சி திருவோணத்தை நினைவுபடுத்தியவுடன் இவருக்கு எம்பெருமானுடைய பரத்துவம் நினைவுக்கு வர அந்தப் பரத்வத்திலே ஈடுபட்டு அவனை அழைக்கிறாள். ப்ரம்ம ருத்ராதிகளைப் படைத்து அவர்களுக்குத் தலைவனானவனே! மாட்டேன் என்று சொல்லாமல் இங்கே வருவாயாக! நீ அன்பு இல்லாதவர்கள் இல்லங்களில் இருந்து விளையாடமல் இங்கே வருவாய்! வயிற்றில் கட்டுண்ட தாமோதரனே! தாயின் சொல்லை கேட்டு நடப்பது தர்மமென்று அறிந்தவனே! இவர்கள் நாயகனான நந்தகோபரைச் சேர்ந்த நம் எல்லோருக்குமே அடிச்சிகளும் அடியார்களும் ஆவார்கள் அப்படியிருக்க எங்ஙனம் இப்படித் துணிந்து தூஷிக்கிறார்களோ தெரியவில்லை என்று நினைந்து, உன்மேல் தூஷணங்களைச் சொல்லிவரும் அடிமைப்பெண்களும் அடியாரும் இருக்குமிடத்திலிருந்து இங்கே வருவாயாக! என்கிறாள்.

ஒன்பதாம் பாசுரத்தில் மற்றொரு இடைச்சி தான் செய்து வைத்திருந்த பக்ஷணவகைகளைக் கண்ணன் திருடி உண்டதை யசோதைக்கு உரைப்பதை அனுபவிக்கிறார். யசோதை நங்காய்! நான் சர்க்கரையால் செய்த லட்டு, சீடை, கறுத்த எள்ளினாலான உருண்டைகளையும் பாத்திரங்களில் அடக்கி வைத்து, இது எனது வீடு, யாரும் வாரார், என்று தீர்மானித்து தகுந்த இடத்தில் வைத்துவிட்டு வீட்டை விட்டுப் போனேன். அப்போது இந்தக் கண்ணன் என் அகம் புகுந்து எல்லாத் திண்பண்டங்களையும் தான் பெறும்படிச் செய்துகொண்டு வீட்டிற்கு வெளியே போனான். நான் வரத் தாமதமாகும் என்று அறிந்து மீண்டும் என் வீட்டினில் புகுந்து உறிகளை அண்ணாந்து பார்த்து நேர்த்தியாய் பளபளப்பான வெண்ணெயையும் எங்கு வைத்திருக்கிறேன் என்று ஆராய்ந்து பார்க்கின்றான். இவை சிலதான்; இன்னும் சொல்ல இருக்கிறது. முதலில் உன் மகனைக் கூவிக் கொள்ளாய் என்கிறாள்.

பத்தாம் பாசுரத்தில் இன்னும் சொல்ல இருக்கிறது; இவை சிலதான் என்று சென்ற பாசுரத்தில் அந்த இடைச்சி சொன்ன மற்ற விஷயங்களை விரிக்கிறார் ஆழ்வார். குணபூர்ணையான யசோதையே! சொன்னால் உனக்கு அப்ரீதி உண்டாகும். சூழ்ச்சியே உடையவனான உன் மகனே என் வீட்டில் நுழைந்து, என்னுடைய பெண்ணை அழைத்து, அவள் கைகளிலிருந்து வளையல்களைக் கழற்றிக் கொண்டு, உடனே என் வீட்டின் பின்புறத்திற்குச் சென்று, அங்கு பழங்களைக் கொண்டுவந்து விற்றுக்கொண்டிருந்த ஒருத்திக்கு அந்த வளையல்களைக் கொடுத்து, அதற்கு ஈடாக நன்றாயுள்ள நாவல்பழங்களை வாங்கிக்கொண்டான். இப்போது நான் செய்யவேயில்லை என்று சொல்லிச் சிரிக்கின்றான் என்று பாசுரமிடுகிறாள்.

பதினோறாம் பாசுரத்தில் இத்தசகத்திற்குப் பலன் சொல்லித் தலைக்கட்டுகிறார் பெரியாழ்வார். பட்டநாதனான விஷ்ணுசித்தனுடைய இந்தப் பத்துப் பாசுரங்களைக் கொண்டு, வண்டுகள் தேனைப் பருகி, அதனால் பரவசப்பட்டு எங்கும் ரீங்காரம் செய்யும் சோலைகளைச் சூழ்ந்ததால் ஓடிவரும் ப்ரவாஹத்தை உடைய காவிரி நதியோடும், அழகிய ஸ்ரீரங்கத்திலே எழுந்தருளியிருக்கும் எம்பெருமான், முன்பு அவன் கண்ணனாய்ச் செய்தருளிய திருட்டு விளையாட்டுகள் யாவற்றையும் பாடி அனுபவித்துக் கூத்தாட வல்லவர்கள், அந்தக் கோவிந்தனுக்குத் தாஸபூதர்களாய் இருந்து எட்டுத் திக்குகளும் ப்ரகாசிக்கும் படி பெரிய தீபங்களாகி நிற்பார்கள். அப்பெரியோர்களின் திருவடி இரண்டும் பாசுரங்களைச் செய்த எனது முடியின் மேல் விளங்கும், என்று கூறி தசகத்தை முடிக்கிறார்.

எம்பெருமானுடைய சோர விருத்தாந்தங்களைப் பாடும் இப்பத்தை அறிந்தோதுபவர்களை எவ்வளவு உயர்த்தியிருக்கிறார் பாருங்கள்! அந்த தாசர்கள் இவருக்கு ஸ்வாமியென்கிறார். கல்பஸூத்ர வ்யாக்யாதாவின் பணிவின் எல்லையிது!

எம்பெருமானின் சோர விருத்தாந்தத்தை அனுபவித்த பெரியாழ்வார் அடுத்து அக்கண்ணன் இடைச்சியரிடத்தில் நடந்துகொண்டதை அனுபவிக் கிறார். அவற்றை அடுத்த இதழில் காண்போம்.

**(தொடரும்...)**

# ஆழ்வார்கள் திருவாக்கில் ‘தேர்’ந்த பொருள்

ஸ்ரீமதி பழவேரி ரமா ராகவஸிம்ஹன்

ஒரு ஆழமான கிணறு. அதில் ஒரு சிறிய தங்கக் குடம் விழுந்து ஆழத்தில் அமிழ்கிறது. ஸ்வர்ணத்தினாலான குடம் என்பதனால் அந்தக் குடத்திற்கு உரிமையாளன் கிணற்றின் ஆழத்திலிருந்து அதனைக் கைக்கொள்ளாமல் விட மாட்டான். இங்கு, ஆழமான கிணறு என்பது நமது கர்மாக்களைக் கழிக்க நாம் கொள்ளும் ஜன்மாவினைக் குறிக்கிறது. தங்கக் குடம் என்பது, நமது கர்மாக்களைக் கழிக்கவென எம்பெருமானிடமிருந்து நாம் அபஹரித்து வந்துள்ள அவனது சொத்தான ஆத்மாவைக் குறிக்கிறது.

ஸம்ஸாரமெனும் கிணற்றிலிருந்து (உண்மையில் ஸாகரம்) நம்மை (ஆத்மாவை) மீட்டு தன்னுள் ஒடுக்கிக் கொள்வதென எம்பெருமான் ஸங்கல்பிக்கிறான். கர்மபத்தர்களைக் கைக்கொள்ள, விண்மீது பரத்வம், கடலில் சயனிப்பதென்னும் வ்யூஹ நிலை, மண்மீது உழல்வதான விபவ நிலை, மலைமேல் நிற்பதான அர்ச்சை நிலை, ஆத்மாவினுள் மறைந்துறைவதான அந்தர்யாமித்வம் என்று ஐந்து நிலைகளாகக் கீழிறங்கி வருகிறான். நம்மாழ்வாரின் திருவாய்மொழி பாசுரம் இதனை நிஷ்கர்ஷிக்கிறது.

*விண்மீதிருப்பாய்! மலைமேல் நிற்பாய்! கடல்சேர்ப்பாய்!*
*மண்மீதுழல்வாய்! இவற்றுளெங்கும் மறைந்துறைவாய்!* [6-9-5]

சாஸ்த்ரங்களைக் காண்பித்து கர்மபத்தர்களைக் கைக்கொள்ள முடியாது என்பதனால், தனது ஈடில்லா அழகினைக் காண்பித்து அவர்களைத் தன்னில் அவகாஹிக்கச் செய்கிறான் அந்த அழகன். இதற்காகவே திருக்கோயில்களில் அர்ச்சா மூர்த்தியாக நின்று உத்ஸவாதிகளைக் கண்டருள்கிறான். அவற்றுள் ரதோத்ஸவம் (திருத்தேர்) மிகவும் விசேஷமானது.

தேர் என்பது அசேதனம். சேதனர்களின் துஷ்கர்மாக்களை அசேதன வஸ்துவாம் தேர் தூசாக்கும் என்பதை ஆழ்வார்கள் செவ்வனே உணர்ந்திருந்ததனால், அசேதனமாம் தேரின் பெருமையினை தமது பல பாசுரங்களில் கொண்டாடியுள்ளனர்.

**இம்மைக்கும் மறுமைக்குமான அசேதனம்**

பெரியாழ்வார் திருமொழிப் பாசுரமாகும் **துப்புடை ஆயர்கள் தம் சொல் வழுவாது ஒருகால்** (1-5-7), **தப்பின பிள்ளைகளைத் தனமிகு சோதிபுக** என்பதன் வ்ருத்தாந்தம் ஸ்வாரஸ்யமானது.

முன்னொரு காலத்தே வைதிகன் ஒருவனுக்கு மூன்று குழந்தைகள் ஜனிக்க, ப்ரஸவித்த தாய் அவற்றைப் பார்க்கும் முன்னரே எங்கு சென்றது என்று யாரும் அறியாத வண்ணம் மூன்று சிசுக்களும் மறைந்து போயின. வைதிகனின் பத்நி நான்காவது முறை கர்ப்பம் தரிக்க, இந்த சிசுவேனும் தப்ப வேண்டுமென்று எண்ணிய அந்த வைதிகன் கண்ணனிடத்தே சென்று அதனை ரக்ஷிக்குமாறு விஜ்ஞாபித்தான். ப்ரஸவ காலத்தில் அந்த வைதிகனது க்ருஹத்தினை காவல் காக்க அர்ஜுனன் முன்வர, கண்ணனும் அந்த ரக்ஷண கார்யத்திற்கு அர்ஜுனனை அனுப்பி வைத்தான். வைதிகனது பத்நியானவள் ப்ரஸவித்த உடனே எப்போதும் போல அந்த (நான்காவது) சிசுவும் யாரும் காணும் முன்னரே மறைந்து போனது. தனது சிசுவை தான் இழந்ததற்குக் காரணம் கண்ணனை ரக்ஷண காரியத்திற்கு வரவிடாமல் செய்த அர்ஜுனனின் செயலே என்று எண்ணிய வைதிகன், ‘அடியேன் க்ருஹத்திற்கு கண்ணன் எழுந்தருளி சிசுவைக் காப்பதை நீயன்றோ தடுத்தாய்’’ என்று அர்ஜுனன் மீது கோபம் கொண்டு அவனைக் கண்ணனிடம் அழைத்துச் சென்றான். கண்ணன் சிரித்துக் கொண்டான். அர்ஜுனனைத் தேர் செலுத்துமாறு உத்தரவிட்டு, வைதிகனுடன் தானும் அந்தத் தேரில் ஏறிக்கொண்டான். அர்ஜுனன் செலுத்திய அந்தத் தேருக்கு, தனது ஸங்கல்பத்தினால் திவ்ய சக்தியினை கல்பித்த கண்ணன் இவ்வண்டத்துக்கு வெளியே தேர் செல்லுமாறு செய்தான். அர்ஜுனனும் அந்த வைதீகனும் தன்னிலை மறக்குமாறு செய்தவன், பரமபதத்தினை அடைந்தவுடன் ஓரிடத்தில் தேரை நிறுத்துமாறு அர்ஜுனனுக்கு உத்தரவிட்டான். அங்கு அந்த வைதிகனின் பிள்ளைகள் நால்வரையும் **(தப்பின பிள்ளைகளைத் தனமிகு சோதிபுக)** அவர்கள் காணச் செய்தான். அப்பிள்ளைகளை ஈன்றவளிடம் சேர்ப்பித்தான்.

இவ்வளவு ப்ரபாவமுடையவனை **ஆடுக செங்கீரை** என்று யசோதை பாவத்தில் பெரியாழ்வார் கொஞ்சுவதாக அமையும் இந்தப் பாசுரத்தில், அவனது நிலமாம் பரமபதத்திற்கு அழைத்துச் செல்லும் வாஹனமாய் தேர் காட்டப்படுகிறது. ப்ராக்ருத சரீரத்துடன் ஆச்ரிதர்கள் வாழும் இந்த நிலத்தில் மட்டுமல்லாது அப்ராக்ருதமான சரீரத்தினைக் கொண்டோர் இருக்கும் பரமபதம் வரை நம்மைக் கொண்டு சேர்க்கும் திவ்ய ஊர்தியாகத் தேர் பரிமளிக்கிறது.

இங்கு **தப்பின பிள்ளைகளைத் தனமிகு சோதிபுக** என்பது, கர்மாக்களுக்குத் தப்பின ஆச்ரிதர்கள் (பரஸமர்ப்பணம்

செய்தோர்) என்னும் பொருளினையும் கொண்டது. பரஸமர்ப்பணம் செய்தோரின் ஸஞ்சித (ஜன்ம ஜன்மாந்திரங்களில் பண்ணிய) கர்மாக்களை எம்பெருமான் ஒழித்து விடுகிறான். இப்பொழுது கொள்ளும் ஜன்மாவிற்கான (ப்ராரப்த) கர்மாக்களை மட்டும் அவர்களை அநுபவிக்கச் செய்கிறான். ஸஞ்சித கர்மாக்களிலிருந்து **தப்பின பிள்ளைகள்,** ஈடுஇணையில்லாத உயர்ந்த தனமாகும் **தனமிகு சோதி** (பரமபதம்) புக (அடையச் செய்கிறான்).

**கர்மபத்தர்களின் ஜன்மமாகும் தேர்**

*பார் மிகுத்த பாரம் முன் ஒழிச்சுவான் அருச்சுனன்*
*தேர் மிகுத்து மாயம்ஆக்கி நின்றுகொன்று வென்றிசேர்*
*மாரதர்க்கு வான்கொடுத்து வையம் ஐவர் பாலதாம்*
*சீர்மிகுத்த நின்அலால் ஓர் தெய்வம் நான் மதிப்பனே?*
(திருச்சந்தவிருத்தம் - 89)

திருமழிசைப்பிரானின் இந்தப் பாசுரத்தில், 'பூமி தன்னால் பொறுக்கவொண்ணாத பாரத்தை (அதர்மிகளாம் துர்யோதனாதிகள்) அழிக்கவென அர்ஜுநனுடைய தேரை மிக கம்பீரமாக நடத்தி, தன்னைச் சரணடைந்த பஞ்ச பாண்டவர்களுக்காக (பகலை இரவாக்கி, ஆயுதம் எடேன் என்று ப்ரதிஜ்ஞை செய்து தர்ம பரிபாலனத்திற்காக ஆயுதம் எடுத்து, கால ஸ்வபாவ வ்யவஸ்தைகளை மாற்றி) விஜய வ்யாபாரங்கள் பல செய்தாய். அப்படிப்பட்ட ச்ரேஷ்டனான தேரோட்டியாம் உன்னையல்லால் வேறு ஒரு தெய்வத்தை ஆச்ரயிக்க மாட்டேன்'' என்பது ஆழ்வார்பிரானின் அநுஸந்தேயம்.

இதில், **மாரதர்க்கு வான்கொடுத்து** என்ற பதங்கள், மஹாரதர்கள் என்ற ஒரே காரணத்தினால் பூமிக்கு பாரமான துரியோதனாதிகளுக்கும் ஸ்வர்க்கம் அநுக்ரஹமாக, அவர்களை அங்கு கொண்டு சேர்ப்பித்தது ரதமே என்று தேரின் ஏற்றத்தினை அழுந்தக் கூறுகிறார்.

கர்மபத்தர்களான நாம் பஞ்ச பாண்டவர்களாக, நமது கர்மாக்களைக் கழிக்கக் கொள்ளும் ஜன்மமே தேராக, (நாம் அடைய வேண்டிய உபேயமாகிய) ஸ்ரீக்ருஷ்ணனே தேரோட்டியாகி (உபாயமாகி) நம்மைக் கரை சேர்ப்பான் என்ற சரணாகதி தத்வத்தினை தேர் கொண்டு விளக்குகிறார் ஆழ்வார்பிரான்.

**தேர் சக்கரமும் திருச்சக்கரமும்**

*மயங்க வலம்புரி வாய்வைத்து வானத்து*
*இயங்கும் எறிகதிரோன் தன்னை முயங்கு அமருள்*
*தேர்ஆழியால் மறைத்தது என்நீ திருமாலே*
*போர்ஆழிக் கையால் பொருது.*
(முதல் திருவந்தாதி – 8)

'ஆச்ரிதர்களான பாண்டவர்களிடத்தே நீ கொண்டிருந்த பக்ஷபாதத்தினால் தானே சூழ்ந்திருப்போர் மயங்கும் வண்ணம் வலம்புரிச் சங்கினை திருவாயில் வைத்து ஊதி, திருச்சக்கரத்தினைக் கொண்டு கதிரவனை மறைத்தாய்?'' என்று எம்பெருமானைப் பொய்கை ஆழ்வார் கேட்பதாய் அமைகிறது இந்தப் பாசுரம்.

**எறிகதிரோன் தன்னை தேர்ஆழியால் மறைத்த** என்று ஸேவித்து, தேரின் சக்கரத்தினை எம்பெருமானின் திருக்கரங்களில் ஒளிரும் திருவாழிப்பிரானுக்கு நிகரெனப் போற்றுகிறார் பொய்கைப்பிரான்.

**கலியன் கொண்டாடும் தேர்**

நவக்ரஹங்களுள் ஒருவனான ஸூர்யனின் ரதத்திற்கு ஓரே ஒரு சக்கரம் மட்டுமே இருக்கும். **ஊழியாய் ஓமத்து உச்சியாய் ஒரு காலுடைய தேர் ஒருவனாய்** எனும் திருமங்கை மன்னனின் பெரிய திருமொழி (5-7-8) பாசுரத்தில், ஒரு காலுடைய தேர் என்று ஸேவித்து, அத்தேரினை முன்னிட்டு நவக்ரஹங்களுள் ப்ரதானமானவனான ஸூர்யன் அடையாளம் காட்டப்படுகிறான்.

இங்கு கலியனின் **திருவெழுக்கூற்றிருக்கை** என்ற ஒரே பாசுரம் கொண்ட ப்ரபந்தத்தை எடுத்துக்கொள்வோம். தமிழ் இலக்கண முறையில் ஏழு படிக்கட்டுகளில் ஏறுவதும் இறங்குவதுமாக (பொதுவாகத் தேரின் அமைப்பு) உள்ள அமைப்பிற்குப் பெயர் எழுகூற்றிருக்கை. உயர்வற உயர்நலம் உடையவனைப் போற்றுவதனால் இந்தப் பாசுரத் தொகுப்பு திரு எழுகூற்றிருக்கை ஆயிற்று. இன்று வரை அனைத்து ஸ்ரீவைஷ்ணவ திவ்ய தேசங்களிலும் எம்பெருமானின் ரதோத்ஸவத்தில் அருளிச்செயல் கோஷ்டியில் ஸேவிப்பது தேர் வடிவில் அமைந்துள்ள இந்த ப்ரபந்தத்தை தான்.

**ஒரு** பேருந்தி **இரு**மலர்த் தவிசில் **ஒரு**முறை அயனையீன்றனை (1-2-1)

**ஒரு**முறை **இரு**சுடர் மீதினிலியங்கா, **மும்**மதிள் இலங்கை **இரு**கால் வளைய,

ஒருசிலை (1-2-3-2-1)

**ஒன்றிய ஈரெ**யிற்றழல்வாய் வாளியில் அட்டனை **மூவடி நானி**லம் வேண்டி, **முப்**புரி நூலொடு மானுரியிலங்கும் மார்வினில், **இரு**பிறப்பு **ஒரு**மாணாகி (1-2-3-4-3-2-1)

**ஒரு**முறை **ஈ**ரடி **மூ**வுலகளந்தனை **நால்**திசை நடுங்க **அஞ்சி**றைப் பறவை ஏறி, **நால்**வாய் **மும்**மதத்து **இரு**செவி **ஒரு**தனி வேழத் தரந்தையை (1-2-3-4-5-4-3-2-1)

**ஒரு**நாள் **இரு**நீர் மடுவுள் தீர்த்தனை **முத்தீ நான்மறை ஐவகை** வேள்வி **அறு**தொழில் அந்தணர் வணங்கும்

தன்மையை **ஐம்**புலன் அகத்தினுள் செறுத்து, **நான்கு**டன் அடக்கி **முக்**குணத்து **இரண்ட**வை யகற்றி, **ஒன்றினில்** (1-2-3-4-5-6-5-4-3-2-1)

**ஒன்றி** நின்று ஆங்கு **இரு** பிறப்பறுப்போர் அறியும் தன்மையை **முக்கண் நால்** தோள் **ஐ**வாய் அரவோடு **ஆறு**பொதி சடையோன் அறிவருந் தன்மைப் பெருமையுள் நின்றனை, **ஏழு**லகெயிற்றினில் கொண்டனை, கூறிய **அறு**சுவைப் பயனும் ஆயினை, சுடர்விடும் **ஐம்**படை அங்கையுள் அமர்ந்தனை, சுந்தர **நால்** தோள் **முந்**நீர் வண்ண, நின் **ஈரடி ஒன்றி**ய மனத்தால் (1-2-3-4-5-6-7-6-5-4-3-2-1)

**ஒரு**மதி முகத்து மங்கையர் **இரு**வரும் மலரென, அங்கையில் **முப்**பொழுதும் வருட அறிதுயில் அமர்ந்தனை, நெறிமுறை **நால்**வகை வருணமும் ஆயினை, மேதகும் **ஐம்**பெரும் பூதமும் நீயே, **அறு**பதம் முரலும் கூந்தல் காரணம் **ஏழ்**விடை யடங்கச் செற்றனை, **அறு**வகைச் சமயமும் அறிவரு நிலையினை, **ஐம்**பால் ஓதியை ஆகத் திருத்தினை, அறமுதல் **நான்கவை**யாய் மூர்த்தி **மூன்றாய் இரு**வகைப் பயனாய் **ஒன்றாய்** விரிந்து நின்றனை (1-2-3-4-5-6-7-6-5-4-3-2-1)

அசேதன வஸ்துவாம் தேரினையே தனது பாசுர நாயகனாக்கி, ஈடில்லாத தனது சித்ர கவித்வத்தினால் தேரின் ஏற்றத்தினை பாங்குற விளக்குகிறார் கலியன்.

ரத வடிவில் அமைந்த திருவெழுகூற்றிருக்கையும் தேர் பற்றின மற்ற பாசுரங்களும், சேதன வர்க்கம் உய்யவெனத் திருவுள்ளம் பற்றின எம்பெருமான் ஆழ்வார்(கள்) மூலமாகச்செய்த ஏற்பாடு. எம்பெருமான் ரதோத்ஸவம் கண்டருள, அவன் தேர் வடத்தினைக் கர்மபத்தர்களாகிய நாம் பிடித்திழுக்க, பலப்பல ஜன்மங்களில் நாம் செய்த துஷ்கர்மாக்கள் ஓடும் தேர் சக்கரத்தின் கீழ் நசுங்கி தூசாகும் என்பது திண்ணம். ஆழ்வார்கள் கொண்டாடிய தேரினையும், அந்தப் பாசுரங்களின் தேர்ந்த பொருளையும் அநுபவித்துக் களிப்போம்.

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 | 1 | | | | | |
| | | | | 1 | 2 | 3 | 2 | 1 | | | | |
| | | | 1 | 2 | 3 | 4 | 3 | 2 | 1 | | | |
| | | 1 | 2 | 3 | 4 | 5 | 4 | 3 | 2 | 1 | | |
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 5 | 4 | 3 | 2 | 1 | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 6 | 5 | 4 | 3 | 2 | 1 |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 6 | 5 | 4 | 3 | 2 | 1 |
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 5 | 4 | 3 | 2 | 1 | |
| | | 1 | 2 | 3 | 4 | 5 | 4 | 3 | 2 | 1 | | |
| | | | 1 | 2 | 3 | 4 | 3 | 2 | 1 | | | |
| | | | | 1 | 2 | 3 | 2 | 1 | | | | |
| | | | | | 1 | 2 | 1 | | | | | |

**திருவெழுக்கூற்றிருக்கையில்**
**தேரின் அமைப்பு**


## ஆஸ்திகர்களுக்கு ஓர் அறிவிப்பு

பித்ரு காரியங்கள் செய்வதற்கு,
சென்னை மயிலை ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானத்திற்குச்
சொந்தமான (G.K. மண்டபம் அருகில்) அறைகள்
வாடகைக்கு விடப்படும்.

விவரங்களுக்கு தேவஸ்தான
அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.

**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்,**
4/11, கேசவ பெருமாள் கோயில் சன்னதி தெரு,
மயிலாப்பூர், சென்னை 600 004.
தொலைபேசி: 044-2495 3799.

ஸ்ரீ:

# தூதர்கள் பலவிதம்

ஸ்ரீமதி அனுராதா சேஷாத்ரி, பெங்களூரு

**தூதர் என்பார் யார்?**

இரு குழுக்களுக்குப் பாலமாக இருப்பவன் ஒரு தூதன். இருவரிடையே செய்திகளை அல்லது கருத்துகளைப் பரிமாறிக் கொள்வதற்கு உறுதுணையாய் இருப்பவரை தூதன், தூதுவன் என்று வழங்குவர். சங்க காலத்தில், அரசர்களிடையே மற்றும் காதலர்களிடையே தூது அனுப்பும் மரபு உண்டு. இதிஹாஸங்களிலும் சங்க இலக்கியங்களிலும் தூது பற்றிய பல செய்திகள் காணப்படுகின்றன. பக்தி இலக்கியமாகிய நாலாயிர திவ்ய ப்ரபந்தங்களிலும், தலைவனான எம்பெருமானிடம் காதல் கொண்ட ஆழ்வார்கள் பெண்தன்மை அடைந்து தூது அனுப்புவதாகப் பாசுரங்கள் உள்ளன. மேலும் சில காவ்ய க்ரந்தங்களிலும் நண்பரையும் மேகத்தையும் பறவைகளையும் தூது அனுப்புவதாக அமைந்துள்ளதையும் காண்கிறோம். உண்மை, நேர்மை, தைர்யம், நாவன்மை, சாதுர்யம் ஆகியவை தூதனுக்குரிய குணங்கள், தகுதிகள் என்று கூறப்படுகிறது. இத்தகு தூமொழி பேசிய சில சிறந்த தூதுவர்களைப் பற்றி இங்கு சற்றே சிந்திப்போம்!

**ஸ்ரீ ராமதூதர் ஹனுமான்**

கடல் சூழ்ந்த இலங்கைத் தீவில் சிறை வைக்கப் பட்டிருந்த சீதை இராவணனால் துன்புறுத்தப்பட்ட நிலையில் நம்பிக்கை இழந்து உயிரை மாய்த்துக் கொள்ளும் மனநிலையில் இருந்த பொழுது, ஹனுமான் இராம தூதனாக வந்து அவளைத் தேற்றி அவள் ராமனுடன் சேர்வதற்கான வழியையும் வகுத்தார். **ஹனுமத்ஸமேந குருணா** என்று ஹனுமாரையும் ஆசார்யனையும் ஒருங்கே புகழ்கிறார் ஸ்வாமி தேசிகன்.!

**பாண்டவதூதன் கண்ணன்**

முன்னாளில் பிராட்டியை பிரிந்து ஆற்றாமையாலே ஒரு வானரத்தின் வாயில் தூது மொழிந்து அனுப்பிய இராமபிரானே பின்னாளில் கண்ணபிரானாக அவதரித்து அரசுக்குரிய பாண்டவர்களுக்காகத் **தருமன்விடத் தாம் தூது போனான்! முன்னோர் தூது வானரத்தின் வாயில் மொழிந்து என்றும் இன்னார் தூதன் என நின்றான்** என்றும் பலவாறாக கலியன் இதனை அற்புதமாக அனுபவிக்கின்றார். ஸ்ரீமத் ராமாயணம் சிறையிருந்தவள் ஏற்றத்தைச் சொல்வது போல், மஹாபாரதம் **தூது போனவன் ஏற்றம்** சொல்கிறது என்று பிள்ளை லோகாசார்யர் அருளிச்செய்துள்ளார். தூதுவனின் பணியை க்ருஷ்ணன் தானே விரும்பி ஏற்றுக் கொண்டான். பாண்டவர்களுக்காக, கழுத்திலே ஓலை கட்டித் தூது போன எம்பெருமானின் நீர்மை நம்மையும் வியக்கத் தான் வைக்கின்றது! இது இவன் விபவத்தில் செய்த லீலை.

**கௌரவர்கள் தூதனாக ஸஞ்ஜயன்**

மஹாபாரத யுத்தத்திற்கு முன்பு திருதராஷ்டிரன் தனது தேரோட்டியான ஸஞ்ஜயனை பாண்டவர்களிடம் போரை நிறுத்தக் கோரி தங்கள் சார்பாக தர்மபுத்ரனிடம் பேச்சு வார்த்தை நடத்துவதற்காக தூதுவனாக அனுப்ப முடிவு செய்தான். ஏனெனில் ஸஞ்ஜயன், கூர்மையான அறிவுடையவர், நீதி தர்மங்களை முழுமையாக அறிந்தவர், ஸமநிலையானவர், பொறாமையில்லாதவர், உண்மையைத் தயக்கமின்றிக் கூற வல்லவர் என்பதனால்.

**கம்ஸனின் தூதனாக அக்ரூரர்**

ஸ்ரீக்ருஷ்ணன் கோகுலத்தில் வளரும் போது, கம்ஸன் பல முறை க்ருஷ்ணனைக் கொல்ல தொடர்ந்து முயன்றான். அவனது முயற்சிகள் அனைத்தும் தோல்வி அடைந்து கடைசியாக க்ருஷ்ணனையும் பலராமனையும் மதுராவிற்கு வருமாறு செய்து அங்கேயே கொல்வதற்குத் திட்டமிட்டான். இதற்காகத் தனது மந்த்ரிகளில் ஒருவரான அக்ரூரர் மூலம் அவர்கள் இருவருக்கும் அழைப்பை அனுப்பினான். அக்ரூரர் க்ருஷ்ணனின் சிறந்த பக்தர். மேலும் அவனே பரத்வமாகிய ஸ்ரீமந்நாராயணன் என்பதை நன்கு அறிந்தவர். ஆகையால் எம்பெருமானை நேரில் கண்டு அனுபவிக்கும் பெரும் பேற்றினைப் பெறுவதற்கு இது தமக்குக் கிடைத்த அரியதோர் வாய்ப்பென எண்ணி மகிழ்வுடன் தூதராகச் சென்றார்! எம்பெருமானிடம் கொண்ட அசஞ்சலமான பக்தியினாலும், விச்வாஸத் தினாலும் இந்தக் கடினமான செயலையும் எளிதாகச் செய்தும் முடித்தார்.

**நம்மாழ்வார் நாயிகா பாவத்தில் பறவைகளை திருமாலிடம் அனுப்பிய தூது**

ஆழ்வார்கள் ஸ்ரீஸூக்திகளில் அவர்கள் எம்பெருமான் மேல் கொண்ட காதலின் ஆழத்தால் தன்னை மறந்து தன் நிலைமையை மறந்து பெண்ணாக, தலைவியாக மாறி அந்நிலையில் பாடும் பாசுரங்களை காண்கிறோம். இந்த நாயிகா பாவத்தில் நிகழ்வது என்ன? பக்தி ச்ருங்காரமாக மாறுகின்றது. எம்பெருமானுடன் கலந்ததாக ஒரு ஆனந்த அனுபவம்! ஸம்ச்லேஷம்! அது மாறி மறைந்த அளவிலே துக்கம்! விச்லேஷம்! பிரிவாற்றாமையில் நாயகி நிலையில் பறவைகள் முதலியவற்றை தூது அனுப்புகிறாள்.



ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச் செய்த நான்கு தூது பதிகங்கள் இங்கு நோக்கதக்கது. இதனை எம்பெருமானின் **பர, வ்யூஹ, விபவ, அந்தர்யாமி, அர்ச்சை** ஆகிய ஐந்து நிலைகளைக் குறித்து தூது அனுப்பியதாக பூர்வாசார்யர்கள் நிர்வஹிக்கின்றனர். அவ்வகையில் பறவைகளை தூதுவிடும் **அஞ்சிறைய மடநாராய்** என்கிற பதிகம், **கடல் ஆழி நீர் தோற்றி அதனுள்ளே கண் வளரும்** என்பதனால் வ்யூஹ நிலையை குறிப்பதாகவும், இங்கு எம்பெருமானின் அபராதஸஹத்வம் என்னும் பெரும் குணத்தை நம்பி ஆழ்வார் தூது அனுப்புகிறார் என்பதும் தாத்பர்யம். **வைகல் பூங்கழிவாய்** என்பதில் **குறளாய் அகல் ஞாலம் கொண்ட** என்பதால் விபவ நிலையை குறிப்பதாகவும், பகவானின் அடியார்களை காப்பாற்றும் தன்மையை பற்றாசாகத் தூது விட்டார் என்பதும் உள்ளுறைப்பொருள். **பொன்னுலகாளீரோ** என்கிற பதிகத்தில் ஆழ்வார் பறவைகளை தூது விடுகிறார். **வானவர் கோனைக்கண்டு** என்பதால் இது பரமபதநாதனைக் குறிப்பதாகத் தீர்வு. அடியார்களுடன் எம்பெருமான் கலந்து ஒன்றாக நிற்கும் அருளைக் (ஆந்ருஸம்சயம்) கண்டு வியந்து தூது விடுகிறார் ஆழ்வார். **எங்கானலகங்கழிவாய்** திருமூழிக்களத்து அர்ச்சாவதார எம்பெருமானின் வடிவழகு, மற்றும் குணங்களை நினைத்து உருகி தூது விடுகிறார் ஆழ்வார் என்றெல்லாம் பூர்வாசார்யர்கள் அற்புதமாக வ்யாக்யானம் அருளிச்செய்துள்ளனர்.

**ஆண்டாள் மேகத்தைத் திருவங்கடவனிடம் அனுப்பிய தூது**

ஆண்டாள் தன் கனவிலே கண்ணனோடு கலந்து அவன் அதரத்தை பருகினதாக நினைத்தாள். கண் விழித்தவுடன் கண்ணபிரானுடைய வாயமுதத்தை நித்யம் அனுபவிப்பவர் யார் என்று சிந்தித்தளவிலே திருச்சங்காழ்வான் நினைவுக்கு வர **கருப்பூரம் நாறுமோ? கமலப்பூ நாறுமோ?** என்று வினவினாள். ஆனால் அச்சங்கு மறு மாற்றம் ஏதும் கூறவில்லையாதலால், ஆண்டாள் ஆற்றாமை மீதூர தன் எதிரே தோன்றின மேகங்களை நோக்கி திருவேங்கடவனிடம் சென்று தனது நிலைமையை உணர்த்தி அவ்வெம்பெருமானுடன் தன்னைச் சேர்க்க வேண்டும் என்று வேண்டினாள் மேக விடு தூதான **விண்ணீல மேலாப்பு** என்கிற திருமொழியில்!

**ஸ்வாமி தேசிகனின் கற்பனையில் ஹம்சம் ஒரு தூதாக**

ஸ்வாமி தேசிகனின் அற்புதமான பல க்ரந்தங்களில் ஒன்றான ஹம்ச ஸந்தேசம், ஒப்பற்றதொரு ஸந்தேச காவியம் என்று போற்றப்படுகிறது. இந்த காவ்ய க்ரந்தத்தில் அனுமன் மூலம் சீதை இருந்த இடத்தை அறிந்த ராமன் அவள் படுகின்ற துன்பங்களை அறிந்து மனம் வருந்துகிறான். தனது ப்ரியமான சீதைக்கு ஒரு



ஹம்ஸத்தைத் தூதாக அனுப்புவதே இக்காவியத்தின் முக்கிய அம்சம். இந்தக் காவியம் ஆண்டாள் மற்றும் நம்மாழ்வார் காட்டிய வழியைப் பின்பற்றுகிறது என்றே கூறலாம். ப்ரபல ஸம்ஸ்க்ருத கவி காளிதாஸன் **மேக ஸந்தேசம்** என்கிற காவியத்தை இயற்றினார். அன்புக்குரியவருக்கு செய்தியை எடுத்துச் செல்ல மேகங்களைத் தூது அனுப்புவதாக அமைந்த அழகான காவியம் அது!

**ஆழ்வாருக்காக அரங்கன் சென்ற தூது**

ஒரு ஸமயம் திருவரங்கனுக்கு துளபத்தொண்டு செய்து வந்த விப்ரநாராயணர் என்கிற பக்தனைச் சற்று சோதிக்க எண்ணம் வந்தது! விப்ரநாராயணர் தேவதேவி என்னும் அரசாங்க தாசியின் வலையில் சிக்கி, சிற்றின்ப வெள்ளத்தில் மூழ்கி எம்பெருமான் கைங்கர்யத்தை மறந்தே போனார். புருஷகார பூதையான பிராட்டியின் உந்துதலினாலும் தன்னுடைய அபார கருணையினாலும் அரங்கன் அவரைத் திருத்திப் பணிகொள்ளத் திருவுள்ளம் கொண்டான். தாமே விப்ரநாரயணரின் வேலையாள் போன்று உருக்கொண்டு தேவதேவியிடம் தூது சென்றான். ஒரு நாடகத்தை நடத்தித் தன் பக்தனை மீட்டுக் கொண்டான். அதன் பின் விப்ரநாராயணர் அரங்கன் ஸேவையைத் தொடர்ந்தும், தொண்டரடி பணிந்தும், அநவரதம் அவர்களுக்குத் தொண்டு புரிந்தும் வாழ்ந்து வந்தார். இதனாலேயே **தொண்டரடிப்பொடி ஆழ்வார்** என்று யாவராலும் போற்றப்பட்டார்! விபவம் மட்டுமின்றி அர்ச்சையிலும் பக்தனுக்காகத் தூது போன எம்பெருமானின் வாத்ஸல்யமும் மஹத்வமும் சொல்லில் அடங்கா!

**தூதுவளை சென்ற தூது**

உய்யக்கொண்டார் என்கிற ஆசார்யனின் நியமனத்தால் ஸ்ரீமந் நாதமுனிகளின் திருப்பேரரான யமுனைத் துறைவரை தர்சன ப்ரவர்த்தகராக்கவும், அவரின் குலதனமான குழலழகர், வாயழகர், கண்ணழகரான அரங்கனை அவருக்குக் காட்டிக் கொடுப்பதற்காகவும் மணக்கால் நம்பி என்கிற ஆசார்யர் தூதுவளை கீரையை தூதாக அரச போகத்தில் உள்ள யாமுனருக்கு அனுப்பினார். அதன்பின் நடந்த சில ஸ்வாரஸ்யமான ஸம்பவங்கள் மூலமே ஆளவந்தார் என்கிற மஹாசார்யர் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்திற்குக் கிடைக்கப் பெற்றார்!

**ஜீவனுக்காக (சிஷ்யனுக்காக) ஆசார்யன் தானே பகவானிடம் தூது செல்வது**

ஜீவாத்மா பரமாத்மாவுக்கு அனுப்பும் தூதுவர் ஆசார்யர்கள் தாம் என்று காட்டித் தருகின்றனர் பெரியோர்கள். தூதாக விடப்படும் பக்ஷிகள், வண்டுகள் ஆகியவற்றால் குறிப்பால் உணர்த்தப்படுபவர் ஆசார்யர்கள் தாம் என்பது ஆன்றோர்களின் கருத்து! பறவைகளுக்கு இரண்டு இறக்கைகள் எவ்விதம் இன்றியமையாததோ அவ்வண்ணமே ஜ்ஞானம், அனுஷ்டானம் என்கிற இரண்டு இறக்கைகள் ஓர் ஸதாசார்யரின் முக்யமான லக்ஷணமாகக் கருதப்படுகின்றன.

அறுகால சிறுவண்டே தொழுதேன் உன்னை என்றும் விண்ணோர் பிரானார் மாசில் மலரடிக்கீழ் எம்மைச் சேர்விக்கும் வண்டுகளே என்றும் ஆசார்யன் செய்யும் மஹோபகாரம் வெளிப் படையாகவே உணர்த்தப்பட்டுள்ளது.

இவ்விதம் ஜீவாத்மாவை பரமாத்மாவுடன் சேர்த்து வைப்பவர் ஆசார்யன் என்பதும் அவர் செய்யும் கார்யம் தூது போன்றது என்பதும் தெளிகின்றது. **தேசிகா:தத்ரதூதா:** என்றுதாத்பர்யரத்னாவளியில்ஸ்வாமி தேசிகனும் இதனை அழகாக விளக்கியருள்கிறார்! எம்பெருமானைக் கலந்திருந்ததாகவும் (ஸம்ச்லேஷம்), பிரிந்திருந்ததாகவும் (விச்லேஷம்) நினைத்துத் தூது விடுகிறார் ஆழ்வார். அவ்வனுபவம் நிலைத்திருக்க ஆசார்யர்களே துணை புரிபவர்களாகையால் அவர்கள் தூதுவர் ஆவர்கள் என்கிற கருத்தை வலியுறுத்துகிறார் ஸ்வாமி தேசிகன்!

**எம்பெருமான் ஜீவனுக்கு அனுப்பும் தூது!**

ஸ்வாமி தேசிகன் தம் **பரமபத ஸோபானம்** என்னும் நூலில் **உறையிட்ட வாளென ஊனுள் உறையும் உயோகியரை நறைமட்டொழிவற்ற நற்றுளவேந்திய நாயகன்** என்று பாடுகிறார்! ஆசார்ய கடாக்ஷத்தினால் ஸ்வரூபஜ்ஞானம் பெற்ற ஜீவன் எம்பெருமானிடத்தில் தன் பரத்தை ஸமர்ப்பித்த பின்பு கோலின காலத்தில், சரீரத்தை விட்டு வெளிக்கிளம்பும் தருணத்தில் எம்பெருமானும் அன்றொரு நாள் **நயாமி பராங்கதிம்** என்று தாம் திருவாய் மொழிந்தபடி இவனை அழைத்துச் செல்ல வருகிறான். அவன் வருவானா என்று இவன் கவலைகொள்ளாதபடி எம்பெருமான் வரும் முன்னே அவன் சூடியிருக்கும் திருத்துழாயின் நறுமணம் அவன் வருகையை ஜீவனுக்குத் தெரிவித்து விடுகிறதாம்!. இதை எம்பெருமான் ஜீவனுக்கு அனுப்பும் ஒரு தூதாகக் கொள்ளலாம்படி **நற்றுளவேந்திய நாயகன்** என்று அற்புதமான ஒரு சொல்லையிட்டு நமக்குக் குறிப்பால் உணர்த்தும் கவிஸிம்ஹத்தின் திறம்தான் என்னே!

தூதர்கள் பலவிதம்! அவர்கள் பேசிய தூமொழிகளும் பலவிதம்! இதை எண்ணுவதும் ஒருவிதமான இனிய அனுபவம்தானே!



*With Pranams:*

**V.A. Raghu & Family,**
225/28, Prithivi Avenue 2nd Street,
Prakrithi Apartments,
Abhiramapuram, Chennai - 600 018.

**SVDD thanks Sri V.A. Raghu & Family**
for sponsoring this month's issue of Desika Sandesam

1



2



3



4




நவராத்ரி ஆஸ்தானம்

5



6



7




8



நவராத்ரி ஆஸ்தானம்